பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4

27 02 2025 **THURSDAY** 7 15 **PM**

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. ஐரோப்பிய நாடுகளுடன் இந்தியா மேற்கொள்ளும் கூட்டு முயற்சிகளுக்கு உத்வேகம் அளிக்கும் வகையில் ஐரோப்பிய ஆணையம் செயல்பட்டு வருவதாக வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்.

2. ஹிந்தி மொழியின் பயன்பாட்டை விரிவாக்கம் செய்ய வேண்டியதன் அவசியத்தை பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங் வலியுறுத்தியுள்ளார்.

3. உலகளாவிய சவால்களுக்கு தீர்வு காணும் வல்லமை இளைய சமுதாயத்தினருக்கு உள்ளதாக மக்களவைத் தலைவர் திரு. ஓம் பிர்லா கூறியுள்ளார்.

4. இந்தியா உள்ளிட்ட நாடுகளிலிருந்து சர்வதேச தரத்திலான பணியாளர்களை ஈர்க்கும் வகையில், கோல்டு கார்டு என்ற புதிய திட்டத்தை அமெரிக்க அதிபர் திரு. டொனால்டு ட்ரம்ப் அறிவித்துள்ளார்.

5. மகளிர் பிரிமியர் லீக் கிரிக்கெட் போட்டியில் பெங்களூரு அணி இன்று குஜராத் அணியை எதிர்கொள்கிறது

>>>>><<<<

ஐரோப்பிய நாடுகளுடன் இந்தியா மேற்கொள்ளும் கூட்டு முயற்சிகளுக்கு உத்வேகம் அளிக்கும் வகையில் ஐரோப்பிய ஆணையம் செயல்பட்டு வருவதாக வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்.

அரசுமுறைப் பயணமாக புதுதில்லி வந்துள்ள ஐரோப்பிய ஆணையத்தின் தலைவர் **Ursula Leyen**-னை இன்று சந்தித்து பேசியபோது திரு. ஜெய்சங்கர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்திய – ஐரோப்பிய நாடுகளின் உறவுகளுக்கு புத்துயிரூட்டும் வகையில், ஐரோப்பிய ஆணைய குழுவினருடன் ஏற்கனவே நடத்திய பேச்சுக்கள் அமைந்ததாக அவர் குறிப்பிட்டார்.

**Ursula Leyen** நாளை, பிரதமர் திரு. நரேந்திர மோடியை தமது தூதுக்குழுவினருடன் சந்தித்து பேசவுள்ளார்.

ஐரோப்பிய ஆணைய குழுவினரின் இந்திய வருகையால் இருதரப்பு உறவுகள் மேலும் வலுப்பெறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இந்தியாவும், ஐரோப்பாவும் கடந்த 2004ஆம் ஆண்டு முதல் இருதரப்பு உறவுகளை ஆக்கபூர்வமான முறையில் மேம்படுத்தி வருவது குறிப்பிடத்தக்கது.

>>>>><<<<

நாட்டின் சமூகத்தையும் கலாச்சாரத்தையும் ஹிந்தி மொழி ஒன்றிணைத்துள்ளதாக பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங் கூறியுள்ளார்.

புதுதில்லியில் இன்று பாதுகாப்பு அமைச்சகத்தின் சார்பில் ஆண்டுக்கு இருமுறை வெளியாகும் **Sashakt Bharat** பத்திரிகையை வெளியிட்டுப் பேசிய அவர், ஹிந்தியின் பயன்பாட்டை ஏற்றுக் கொண்டு, அதனை விரிவாக்கம் செய்ய வேண்டியதன் அவசியத்தையும் வலியுறுத்தினார்.

பாதுகாப்புத்துறை அமைச்சகம் அலுவல் மொழியாக ஹிந்தியை ஊக்குவித்து வருவது பாராட்டுக்குரியது என்றும் அவர் தெரிவித்தார்.

முப்படை வீரர்களின் தேசப்பற்று, வீரம் மற்றும் தியாகத்தை வெளிப்படுத்தும் வகையில் கட்டுரைகள், கவிதைகள் உள்ளிட்டவை இந்த பத்திரிகையில் இடம்பெறும் என்று கூறினார்.

பாதுகாப்புத்துறையில் அரசின் கொள்கைகளை முப்படையினர் அறிந்து கொள்ளும் வகையில் அதில் வெளியிடப்படும் என்றும் திரு. ராஜ்நாத் சிங் குறிப்பிட்டார்.

**>>>>><<<<**

ஜனநாயகம் மற்றும் கூட்டாட்சி அடிப்படையிலான இந்தியாவின் வளர்ச்சி, பிற நாடுகளுக்கு முன்னுதாரணமாக திகழ்கிறது என்று மத்திய அரசின் தலைமை பொருளாதார ஆலோசகர் திரு. அனந்த நாகேஸ்வரன் கூறியுள்ளார்.

ஜோகன்னஸ்பர்க்கில் நடைபெற்ற தென்னாப்பிரிக்கா மற்றும் இந்திய தொழில்துறையினரின் கருத்தரங்கில் பேசிய அவர், உலகில் அதிக மக்கள்தொகை கொண்ட நாடாக திகழும் இந்தியா, தனது சொந்த முயற்சியின் மூலம் வளர்ச்சியடைந்த நாடாக உருவெடுக்கும் என்று தெரிவித்தார்.

கட்டமைப்பு வசதி மேம்பாடு, தேவையான கட்டுப்பாடுகளை அகற்றுதல் போன்றவற்றுடன் கல்வித்துறையில் அதிக முதலீடு செய்வதற்கான நடவடிக்கைகளை இந்தியா மேற்கொண்டு வருவதாகவும் திரு. அனந்த நாகேஸ்வரன் தெரிவித்தார்.

**>>>>><<<<**

வேவ்ஸ் உச்சி மாநாடு, ஊடகம் மற்றும் பொழுதுபோக்கு நிகழ்ச்சி ஏற்பாட்டாளர்களின் சங்கமமாக அமையும் என தகவல் ஒலிபரப்புத்துறை செயலாளர் திரு. சஞ்சய் ஜாஜூ தெரிவித்துள்ளார்.

பெங்களூருவில் இன்று **AVGC** தொழில்துறையினரின் பிரச்சார நிகழ்ச்சியை தொடங்கி வைத்துப் பேசிய அவர், மும்பையில் வரும் மே மாதம் 1ஆம் தேதி முதல் 4ஆம் தேதிவரை நடைபெறவுள்ள வேவ்ஸ் மாநாடு, படைப்பாளிகள் மற்றும் தொழில்நுட்ப வல்லுநர்களுக்கு பெரும் வாய்ப்பாக அமையும் என்றார்.

தொன்றுதொட்டு, இந்தியாவின் கலாச்சாரம் மற்றும் பாரம்பரியம் குறித்து கதை சொல்லுதல் என்பது ஒரு வழக்கமாக இருந்து வருவதை அவர் சுட்டிக்காடினார்.

இந்த துறையில் படைப்பாளிகளும், தொழில்நுட்ப நிபுணர்களும் இணைந்து பணியாற்றி, தற்போதைய உலக சூழலுக்கேற்ற பொழுதுபோக்கு மற்றும் விளையாட்டு நிகழ்ச்சிகளை உருவாக்குவதன் மூலம், ஆரஞ்சு பொருளாதாரத்திற்கு தங்களது பங்களிப்பை வழங்க முடியும் என்றும் திரு. சஞ்சய் சாஜூ தெரிவித்தார்.

>>>>><<<<

விண்வெளி கதிர் இயக்கத்தின் உயிரியல் விளைவுகள் மற்றும் மனிதர்களை விண்வெளிக்கு அனுப்புவதற்கான வழிமுறைகள் குறித்த சர்வதேச மாநாடு புதுதில்லியில் இன்று தொடங்கியது.

மத்திய அரசின் முதன்மை அறிவியல் ஆலோசகர் திரு. அஜய்குமார் சூட், பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நிறுவனத்தின் தலைவர் திரு. சமீர் காமத் ஆகியோர் இம்மாநாட்டை கூட்டாக தொடங்கி வைத்தனர்.

நிகழ்ச்சியில் பேசிய திரு. அஜய்குமார் சூட், விண்வெளி ஆராய்ச்சிகள் அதிகரித்து வருவதன் காரணமாக, வருங்காலத்தில் கதிரியக்க விளைவுகளும் அதிகரிக்கக்கூடும் என்று கூறினார்.

இதுபோன்ற பிரச்சினைகளுக்கு தீர்வு காண இந்த மாநாடு உதவிகரமாக அமையும் என்றும் அவர் நம்பிக்கை தெரிவித்தார்.

பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நிறுவனத்தின் தலைவர் திரு. சமீர் காமத் பேசுகையில், சுகாதார சேவை முதல் திடப்பொருள் அறிவியல் வரை பல்வேறு ஆராய்ச்சிகளுக்கு இந்த மாநாடு வழிவகுக்கும் என்று தெரிவித்தார்.

>>>>><<<<

உத்தரபிரதேசத்தின் பிரயாக்ராஜில் நடைபெற்ற மகாகும்பமேளாவின் போது, துப்புரவு மற்றும் சுகாதாரப் பணியில் ஈடுபட்ட அனைத்து பணியாளர்களுக்கும் தலா 10 ஆயிரம் ரூபாய் ஊக்கத்தொகையாக வழங்கப்படும் என்று அம்மாநில முதலமைச்சர் யோகி ஆதித்யநாத் தெரிவித்துள்ளார்.

மகாகும்பமேளா நிறைவடைந்ததை அடுத்து, பிரயாக்ராஜில் மேற்கொள்ளப்பட்டு வரும் தூய்மைப் பணிகளை தொடங்கி வைத்த அவர், துப்புரவு தொழிலாளர்களுக்கு மதிய விருந்தளித்தார்.

இதனிடையே, மகாகும்பமேளாவின்போது மேற்கொள்ளப்பட்ட துப்புரவுப் பணிகள் கின்னஸ் சாதனை புத்தகத்தில் இடம்பெற்றுள்ளது.

இதற்கான சான்றிதழ், முதலமைச்சர் யோகி ஆதித்யநாத்திடம் இன்று வழங்கப்பட்டது.

>>>>><<<<

ஆகாஷ்வாணி ஒலிபரப்பை நகர்ப்புற மக்களும் ஆர்வமுடன் கேட்கும் வகையில் இளைஞர்களை அதிக அளவில் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்று பிரஸார் பாரதியின் தலைவர் திரு. **Navneet Kumar Sehgal** வலியுறுத்தியுள்ளார்.

குஜராத் மாநிலம், அஹமதபாத் வானொலி நிலையத்தில் இன்று அவர் ஆய்வு செய்தார்.

அங்கு ஒலிபரப்பு அரங்குகள், செய்திப்பிரிவு மற்றும் நிகழ்ச்சி பிரிவுகளையும் பார்வையிட்டு அதிகாரிகளுக்கு ஆலோசனைகளை அவர் வழங்கினார்.

தொழில்நுட்ப ரீதியாக ஒலிபரப்பின் தரத்தை உயர்த்துவதற்கான நடவடிக்கைகளை பொறியியல் பிரிவினர் மேற்கொள்ள வேண்டும் என்று அவர் தெரிவித்தார்.

மின்னணு தொழில்நுட்பத்தை பயன்படுத்தி, பண்பலை ஒலிபரப்பை விரிவாக்கம் செய்ய வேண்டியதன் அவசியத்தையும் அவர் வலியுறுத்தினார்.

**Wave OTT** தளங்களை பயன்படுத்தி இளையோரை கவரும் வகையில் தகவல்களையும், பொழுதுபோக்கு அம்சங்களையும் உள்ளடக்கிய நிகழ்ச்சிகளை வழங்க வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டார்.

குறிப்பாக, பெண்கள் பயன்பெறும் வகையில் புதுமையான நிகழ்ச்சிகளை கொண்டுவர வேண்டும் என்றும்

பிரஸார் பாரதியின் தலைவர் திரு. **Navneet Kumar Sehgal** அதிகாரிகளை அறிவுறுத்தினார்.

>>>>><<<<

உலகளாவிய சவால்களுக்கு தீர்வு காணும் வல்லமை இளைய சமுதாயத்தினருக்கு உள்ளதாக மக்களவைத் தலைவர் திரு. ஓம் பிர்லா தெரிவித்துள்ளார்.

மகாராஷ்ட்டிர மாநிலம், புனேயில் உள்ள பாரதி வித்யாபீட நிகர்நிலை பல்கலைக் கழகத்தின் 26வது பட்டமளிப்பு விழாவில் கலந்து கொண்டு பேசிய அவர், ஜனநாயக மாண்புகளை இளைய சமுதாயத்தினர் கடைபிடிக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

புனே, சமூக சீர்திருத்தத்தின் மையமாக திகழ்கிறது என்று கூறிய அவர், நாட்டின் வளர்ச்சியில் இந்நகரம் முக்கியப் பங்களிப்பை அளித்து வருவதாக தெரிவித்தார்.

பட்டமளிப்பு விழாவில் 6 ஆயிரத்து 815 மாணவ, மாணவியருக்கு பட்டங்களை அவர் வழங்கினார்.

இதில் 71 பேர் முனைவர் பட்டங்களை பெற்றனர்.

42 பேர் தங்கப்பதக்கம் பெற்றுள்ளனர்.

>>>>><<<<

இந்தியா மற்றும் பிற நாடுகளிலிருந்து சர்வதேச தரத்திலான பணியாளர்கள் மற்றும் தொழில்நுட்ப வல்லுநர்களை ஈர்க்கும் வகையில், கோல்டு கார்டு என்ற புதிய திட்டத்தை அமெரிக்க அதிபர் திரு. டொனால்டு ட்ரம்ப் அறிவித்துள்ளார்.

அமெரிக்காவின் ஹார்வேர்டு, ஸ்டேன்ஃபோர்டு உள்ளிட்ட பல்கலைக் கழகங்களில் பணியாற்றுவதற்கான பேராசிரியர்கள் உள்ளிட்டோருக்கு இத்திட்டத்தின் கீழ் பணி வழங்கப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

கோல்டு கார்டு பெறுபவர்கள் அமெரிக்காவில் உயர்கல்வி நிறுவனங்கள் உள்ளிட்ட முக்கிய அமைப்புகளில் தங்குதடையின்றி பணியாற்ற முடியும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

>>>>><<<<

யுக்ரைனில் உள்ள அரிதான கனிம வளங்களை எடுப்பதற்கான ஒப்பந்தம், அந்நாட்டு அதிபர் திரு. விளாடிமிர் ஜெலன்ஸ்கியுடன் நாளை கையெழுத்திடப்படவுள்ளதாக அமெரிக்க அதிபர் திரு. டொனால்டு டரம்ப் தெரிவித்துள்ளார்.

யுக்ரைனில் போர் நிறுத்தத்தை முழுமையாக கொண்டுவருவது குறித்தும் யுக்ரைன் அதிபருடன் ஆலோசிக்கப்படவுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

இதனிடையே, யுக்ரைன் அதிபர் திரு. ஜெலன்ஸ்கி, அமெரிக்காவுடன் புதிய ஒப்பந்தங்கள் மேற்கொள்வதை உறுதி செய்துள்ளார்.

கனிமவளங்களை எடுப்பது மட்டுமின்றி, யுக்ரைனின் பாதுகாப்பை வலுப்படுத்துவது குறித்தும் அமெரிக்காவுடன் ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்படும் என்று திரு. ஜெலன்ஸ்கி கூறியுள்ளார்.

>>>>><<<<

மகளிர் பிரிமியர் லீக் கிரிக்கெட் போட்டியில் இன்று நடைபெறவுள்ள ஆட்டத்தில் பெங்களூரு அணி – குஜராத் அணியை எதிர்கொள்கிறது.

இப்போட்டி, பெங்களூருவில் இரவு மணி 7.30-க்கு தொடங்குகிறது.

>>>>><<<<

ரஞ்சிக்கோப்பை கிரிக்கெட் இறுதிப்போட்டியில் கேரளாவுக்கு எதிரான ஆட்டத்தின் இரண்டாம் நாளான இன்று விதர்பா அணி தனது முதல் இன்னிங்சில் 379 ரன் எடுத்துள்ளது.

இதனையடுத்து விளையாடிய கேரள அணி முதல் இன்னிங்ஸில் இன்றைய ஆட்டநேர இறுதியில் 3 விக்கெட் இழப்பிற்கு 131 ரன் எடுத்துள்ளது.

>>>>><<<<

ஜெர்மன் ஓப்பன் பேட்மிண்டன் போட்டியின் கலப்பு இரட்டையர் பிரிவு காலிறுதிக்கு முந்தைய சுற்றில், இந்தியாவின் **Dhruv Kapil – Tanisha Crasto** இணை மற்றும் ஜெர்மனின் **Jones Ralfy Jansen – Thuc Phuong Nguyen** இணை இடையேயான ஆட்டம் சற்றுமுன் தொடங்கியது.

>>>>>END<<<<